வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 3174 /ஆ1/2022 நாள் 23.08.2022

----

பொருள் : வேலூர் மாவட்டம் பள்ளிக் கல்வி – "நம்ம ஊரு சூப்பரு" – சுகாதாரம் – குடிநீர், சுகாதாரம் மற்றும் கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் – சார்பு.

பார்வை : வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டம் நாள் 20.08.2022

----

வேலூர் மாவட்டம், அனைத்து வகை உயர் / மேல்நிலைப் பள்ளிகள் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் கவனத்திற்கு, 20.08.2022 அன்று வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் "நம்ம ஊரு சூப்பரு" என்ற சிறப்பு சுகாதார இயக்கத்தினை 20.08.2022 முதல் 02.10.2022 வரை நடத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. இந்த இயக்கத்தில் சுகாதாரம், குடிநீர், கழிப்பறை சுத்தம் மற்றும் பள்ளி வளாக தூய்மை தொடர்பாக பள்ளி மாணாக்கர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டுமென தெரிவிக்கப்பட்டது. எனவே அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் கீழ்காணும் வழிமுறைகளை பின்பற்றி மாணாக்கர்களுக்கு அறிவுரைகள் வழங்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

- மாணாக்கர்கள் சன்னல் வழியாகவோ, வகுப்பறையிலோ, வகுப்பறை சுற்றியுள்ள பகுதியிலோ மற்றும் பள்ளி வளாகத்தினுள் காகிதம் எறிதல், துண்டு காகிதம், குப்பைகளை எறிதல் மற்றும் சாக்லேட் உறைகளை வெளியில் எறிதல் போன்ற செயல்களை தவிர்க்கும் வகையில் தலைமை ஆசிரியர்கள், வகுப்பு ஆசிரியர்கள், பாட ஆசிரியர்கள் இதர ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் மூலமாக மாணாக்கர்களுக்கு இறைவணக்கக் கூட்டத்தில் தக்க அறிவுரைகளை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.
- மேலும், இதை தவிர்க்கும் வகையில் பள்ளியிலுள்ள ஒவ்வொரு வகுப்பறையிலும் சிறிய அளவில் குப்பை கூடைகளை வைக்க ஏற்பாடு செய்திடவும், வகுப்பறையின் வெளியே ஒரு சில இடங்களில் குப்பை தொட்டிகளை வைத்து தூய்மை பணியாளர்கள் மூலம் தினமும் அப்புறப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- மாணாக்கர்களுக்கு பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக்கப் பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்க்குமாறு அறிவுரை வழங்குதல் வேண்டும். மேலும், பள்ளியிலும் மற்றும் வீட்டிலும் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து தனித்தனி குப்பை தொட்டிகளில் சேகரிந்து துய்மை பணியாளர்கள் வரும் போது அவர்கள் எடுத்து செல்ல வழிவகை செய்ய வேண்டும் இது சார்ந்த அறிவுரைகளை இறைவணக்கக் கூட்டத்தில் மாணாக்கர்களுக்கு தெரிவிக்கப்படவேண்டும்.
- பள்ளிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (R.O. system) அதை முறையாக பராமரித்து மாணாக்கர்களுக்கு எப்போதும் பயன்படும் வகையில் தயார் நிலையில் வைத்திருக்க தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், மழைநீர் தேக்கத்

தொட்டிகளை அமைத்து மழைநீர் சேமிப்பு திட்டத்தினை செயல்படுத்தி மழைநீரை வீணாக்காமல் பயன்படுத்துவதற்கு மாணாக்கர்களுக்கு அறிவுரைகள் வழங்க வேண்டும்.

- பள்ளி வளாகத்திலுள்ள காலியாக உள்ள ஒரு பகுதியில் காய்கறி தோட்டங்கள் அமைத்து மாணாக்கர்களுக்கு இதன் பயன்களையும் முக்கியத்துவத்தையும் தெரியப்படுத்த வேண்டும்.
- பள்ளி அளவில் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் ஆகியோர்கள்கொண்டு கூட்டம் நடத்தி, அக்கூட்டத்தில் "நம்ம ஊரு சூப்பரு" மற்றும் "நம்ம பள்ளி சூப்பரு" என்பதற்கு இணங்க குழு உருவாக்கப்பட வேண்டும். இக்குழு மூலமாக பள்ளிகளில் பயிலும், 6-8, 9-10, 11-12 ஆகிய வகுப்புகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு முதலில் இப்பொருள் சார்ந்து பேச்சு, கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தி பள்ளி அளவில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெறும் மாணாக்கர்களை தேர்ந்தெடுத்து ஒன்றிய அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ள தலைமை ஆசிரியர் வழிவகை செய்ய வேண்டும் ஒன்றிய அளவில் முதல் மூன்று இடங்களில வெற்றி பெறும் மாணாக்கர்களை தேர்ந்தெடுத்து, மாவட்ட அளவில் நடத்தப்படும் போட்டிகளில் பங்கேற்க செய்து, மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெறும் மாணாக்கர்களை பாராட்டி பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும். (இப்பொருள் சார்ந்து தனியே சுற்றறிக்கை அனுப்பப்படும் )

எனவே, அனைத்து வகை உயர் / மேல்நிலைப் பள்ளிகள் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் மேற்கூறிய வழிமுறைகளை பின்பற்றி ஒவ்வொரு பள்ளியிலும், "நம்ம ஊரு சூப்பரு", "நம்ம பள்ளி சூப்பரு" என்பதற்கு இணங்க மாணாக்கர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த போதிய அறிவுரைகள் மற்றும் விழிப்புணர்வை இறை வணக்க கூட்டத்தில் வழங்க வேண்டுமெனவும் இப்பொருள் சார்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை தலைமை ஆசிரியர்கள் Whatsapp குழுவில் பதிவேற்றம் செய்ய வேண்டும் எனவும் திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள்
அனைத்து வகை உயர் / மேல்நிலைப் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.

நகல்

1. வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. திட்ட இயக்குநர், DRDA வேலூர் மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.